<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 91/2013 நாள்: 21.01.2026 வா.சா.1 – பங்கஜவள்ளி**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

தாவா சொத்து எனது தந்தை இறக்கும் வரை அவருடைய சுவாதினத்தில் இருந்தது என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 28.02.1986 ல் எனது தந்தை குடும்ப பாக ஒப்பந்தம் பி.சா.ஆ.1 ஐ எழுதி மகன்களுக்கு அவர் வாழ்நாளிலேயே தாவா சொத்தை கொடுத்துவிட்டார் என்றும், நான் சொல்வது போல் அவர் கைவசம் தாவா சொத்து இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தந்தை 29.06.2002 ல் காலமானார். எனது தந்தை 08.07.2002 ல் காலமானார் என்றால் சரியல்ல. 28.02.1986 லிருந்து 08.07.2002 வரை எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தை அவர் கைவசம் வைத்து அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் உள்ள வீட்டு வரி, மின்சார ரசீதுகள் ஆகியவை என் கைவசம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சொல்வது போல் எவ்வித ஆவணமும் என் கைவசம் இல்லை, உண்மையில் இருந்திருந்தால் நான் இந்த வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தந்தையின் சுயார்ஜித சொத்துக்கள். தாவா சொத்து எனது தந்தை கிரைய வாங்கிய சொத்து. எனது தந்தை கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்துக்களை எனது தந்தை எனது அண்ணனான சௌந்தராஜினிடம் இருந்து ஒரு கிரைய ஆவணம் மூலம் கிரையம்

வாங்கியுள்ளார். எனது தந்தைக்கு எவ்வாறு சொத்துக்கள் கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு இரண்டு கிரைய ஆவணங்கள் தாவா சொத்துக்கள் கிடைத்தன என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் தெரியவில்லை என்றும், என்ன ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாகம் இருக்கும் உரிமையை எனது தந்தை இறந்த பிறகு எனக்கு தெரியும். 2002 ம் ஆண்டு எனது தந்தை காலமான பிறகு எனக்கு தாவா சொத்தில் பாகம் இருக்கின்ற உரிமை தெரிந்தவுடன் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் 11 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலவரையறை சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 28.02.1986 அன்று எனது தந்தை என்னுடைய சகோதரன் பெயருக்கு தாவா சொத்தை பி.சா.ஆ.1 ஆவணம் மூலம் எழுதி வைத்த காரணத்தினால் அது உண்மை என்பதாலும், நான் உடனடியாக பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 2005 ம் ஆண்டு தாவா சொத்திற்கு குடிவந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் 2005 ம் ஆண்டு தாவா சொத்திற்குள் குடிவரவில்லை என்றும், 2013 ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக அத்துமீறி ஆக்கிரமித்து குடிபுகுந்தேன் என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டு முதல் தாவா சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி ஆதார் கார்டு தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார். நான் சொல்வது போல் ஆதார் கார்டு எதுவும் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி சத்தியபாமா வழக்கு சொத்தில் நிரந்தரமாக குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி பொள்ளாச்சி தாலுகா, வேட்டைகாரன்புதூர், பாறை வீதி கதவு எண்.18 ல் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2வது வாதி பாக்கியலெட்சுமி தாவா சொத்தில் நிரந்தரமாக குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 2வது வாதி பொள்ளாச்சி தாலுகா,

கோட்டூர் மலையாண்டிபட்டினத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் 3 பேரும் தாவா சொத்தில் கூட்டு பொது சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கில் நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2வது பிரதிவாதி சண்முகவடிவேல் தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி தெரியவில்லை என்று கூறுகிறார். வழக்கு சொத்தில் 2வது பிரதிவாதி குடியிருக்கிறார் என்று சொன்னால் வழக்கு எனக்கு விரோதமாக அமைந்துவிடும் என்பதால் நான் தெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2வது பிரதிவாதி சண்முகவடிவேல் அவர் மனைவியுடன் தாவா சொத்தில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. 3 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தற்போது குடியிருக்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் உள்ள வா.சா.ஆ.1 மற்றும் 2 கிரைய ஆவணங்கள் யார் கைவசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது தந்தை இறந்த பிறகு தாவா சொத்தில் வாதிகளான எங்களுக்கு உரிமையிருப்பதாக தெரிவித்து வருவாய் துறையினரிடம் பட்டாவில் பெயர் சேர்க்க மனு எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தினுடைய வரி விதிப்பு, மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவற்றில் எனது தந்தை இறந்த பிறகு எங்கள் பெயரை சேர்க்க வேண்டும் என்று மனு எதுவும் நாங்கள் உரிய துறையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எங்கள் கைவசம் உள்ளது என்பதை காட்டுவதற்கு கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்தின் மதிப்பு எனக்கு தெரியும். தாவா சொத்தின் மதிப்பு வழக்கு தாக்கல் செய்யும் போது எவ்வளவு என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்து எத்தனை செட்யூல்கள் என்ற விவரம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்களுக்கான செக்குபந்திகள் எனக்கு தெரியாது,

அதனுடைய விஸ்தீரணமும் எனக்கு தெரியாது. தாவா சொத்து 2வது வார்டில் உள்ளது. 2வது பிரதிவாதி தவிர மற்ற சகோதரர்கள் அனைவரும் வாதிகளான எங்களை தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் எனக்கு வழக்கு விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் ஞாபகம் இல்லை என்று சொல்வது பொய் என்றும், உண்மையிலேயே எனக்கு வழக்கு விவரங்கள் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம். மேற்படி அறிவிப்பை ஜம்புலிங்கம் என்ற திருப்பூர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினோம், தேதி ஞாபகம் இல்லை. நாங்கள் அனுப்பிய அறிவிப்பை 2வது பிரதிவாதி சண்முகவடிவேல் வாங்கினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த முகவரிக்கு அவர் பெயருக்கு அறிவிப்பு அனுப்பினோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக வழக்கு விவரங்கள் கேட்டு தெரிந்து தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்தில் மரங்கள் எதுவும் இல்லை. 8வது பிரதிவாதி கோமதிநாயகம் என்பவர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.சா.ஆ.1 ஆவணத்தில் R.N.செளந்தராஜன், R.C.நடராஜன், R.C.N.சண்முகவடிவேல், R.N.மயில்சாமி, R.N.கிருஷ்ணகுமார் ஆகியோர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள், அவர்களுடைய கையொப்பமா என்று எனக்கு தெரியாது, என்ன ஆவணத்தில் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்க்காமலேயே அதை நான் தவறு என்று சொல்வது சட்டப்படி சரியானதல்ல என்றால் சரியல்ல. எனது ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நாங்கள் எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஐ தாக்கல் செய்துள்ளோம். எனது தந்தையின் வாரிசு சான்றிதழின் நகல் வேண்டும் என்று வட்டாட்சியரிடம் நான் கேட்டுள்ளேனா என்றால் சாட்சி தந்தையின் வாரிசு

சான்றிதழ் என் கைவசம் உள்ளது என்று கூறுகிறார். மேற்படி வாரிசு சான்றிதழ் யார் தந்து இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி நாங்களே வாங்கியதாக கூறுகிறார். எனது சகோதரர் கிருஷ்ணகுமார் வாரிசு சான்றிதழ் கொடுத்து எங்கள் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 ஆவணமானது எனது சகோதரர் கிருஷ்ணகுமார் என்பவர் பாலாமணி என்ற நபருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். அவர் 1/7 பாகத்தை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை எனது சகோதரர் கிருஷ்ணகுமாரிடம் இருந்து தான் வாங்கினேன். 2வது பிரதிவாதி தவிர மற்ற சகோதரர்கள் ஆவணங்கள் கொடுத்து தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி நகல் போட்டு ஆவணங்கள் எடுத்ததாக கூறுகிறார். நான் சொல்வது போல் நகல் போட்டு நான் ஆவணங்களை வாங்கவில்லை, முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 புகைப்படங்களை எனது மகன் தான் எடுத்தார். எந்த தேதியில் புகைப்படம் எடுத்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி புகைப்படத்தை நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக எனது மகன் எடுத்து விட்டார் என்றால் சாட்சி 2வது முறை நான் சாட்சியம் அளிக்கும் போது எனது மகன் மேற்படி புகைப்படத்தை எடுத்தார் என்று கூறுகிறார். 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தனிதனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. நான் அதை படித்து பார்க்கவில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு அதற்கு மறுப்பு தெரிவித்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பாகபிரிவினை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது தந்தைக்கும், எனது சகோதரருக்கும் இடையே ஏற்கனவே பாகபிரிவினை ஆகிவிட்டதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது, நிலைக்கத்தக்கதல்ல

என்றால் சரியல்ல. எனது சகோதரர் கிருஷ்ணகுமார் அவருடைய பாகத்தை பொறுத்து பாலாமணி என்பவருக்கு விற்பனை செய்துள்ளதாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி பாலாமணியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் பாகம் எதுவும் கிடையாது என்றும், நான் கோருகின்ற பரிகாரம் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.21 17:11:57 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.